RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt2224s-22246

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# இலக்கணங்கள் கூறும் நடுகல் வழிபாடு

ரெ. ஐஸ்வர்யா [அ, *], ப. டேவிட் பிரபாகர் [அ]

[அ] தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்-600059, தமிழ்நாடு, இந்தியா

# The Middle Stone Worship in Grammar Texts

R. Aishwarya [a, *], P. David Prabhakar [a]

[a] Department of Tamil, Madras Christian College, Tambaram-600059, Tamil Nadu, India

* Corresponding Author: balajiaishu2@gmail.com

Received: 27.09.2022
Revised: 10-11-2022
Accepted: 17-11-2022
Published: 01-12-2022

Check for updates

## ABSTRACT

In ancient times, there was a custom of worshiping the warriors as deities who died protecting the nation and race. To honour the heroism and sacrifice of the those warriors, they planted stones in their memory and worshiped them. The middle stones contain important historical information such as traditions, reign of kings, language, culture, war methods etc. These remain an indestructible repository even after thousands of years. The changes can be seen in the inscriptions of the Pallavas, Cholas, Pandyas, and Nayakars. The practice of worshiping the stone deity has existed in ancient times as well as contemporaneous events and all this can be witnessed through middle stone inscriptions. Warriors who wanted to establish their fame in the impermanent world were willing to lose their impermanent bodies and lives in battle and gained what they thought was immortal fame. That in order to uphold the fame of the fallen hero, they erected a middle stone and worshiped it. The aim of this study is to examine the rituals and beliefs.This study has been carried out with the hypothesis that the Nadukal tradition mentioned by Tolkappiyar is consistent with the Nadukal traditions stated in other grammar books and the Sanga literary Nadukal tradition. Texts such as Tolkappiyam, Puraporul Venbamalai, Veerachozhiyam, Ilakkana Vilakkam, Saminatham etc. are the primary sources of the study. Grammatical texts are the supplementary sources. It can be known through the grammar texts that ancienty Tamil people praised Nadukal worship. The article concludes that the Nadukal worship methods are mentioned in the grammar texts that appeared after the Tolkappiya Nadukal tradition.

**Keywords:** Nadukal, Sangha Literature, Grammar, Tolkappiyam, Materialism Venpamalai, Worship Tradition, Customs, Beliefs

## முன்னுரை

பெருங்கற்காலப் பிணக்குழிகள், பதுக்கைகள், பிரமிடுகள் எனப் பல்வேறு பரிணாம வளர்ச்சி பெற்ற பின்னரே நடுகல் வழிபாடு என்ற நிலையை அடைந்தது. மனிதனுக்கு நன்மை செய்யும் ஆற்றல்கள் சில பொருட்களில் உள்ளீடாக அமைந்துள்ளன என்ற நம்பிக்கையில் எழுந்ததே வழிபாடு ஆகும். பறவைகள், ஆயுதங்கள், கருவிகள், விலங்குகள், முன்னோர் பயன்படுத்திய பொருட்கள் ஆகியவை வழிபடப்படுகின்றன. வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த தனது முன்னோர்களையும், தாய் தந்தையரையும் போற்றும் வகையில் மனிதன் அவர்களைத் தெய்வமாக வணங்கத் தொடங்கினான். அதனால் முன்னோர்கள் பலநன்மைகளைச் செய்து காப்பாற்றுவதாக நம்பினான். அதன் விளைவாகத்தோன்றியதே முன்னோர் வழிபாடு ஆகும்.இறந்தவர் மீது கொண்ட அச்சமும்,

நம்முன்னோர் நம்மைப் பாதுகாப்பர் என்றநம்பிக்கையும் நடுகல் வழிபாட்டிற்கு மிகவும்முக்கியத்துவமாக அமைந்தன.

போரில் மாண்ட வீரர்களுக்கு நடுகல் எடுத்தல், பத்தினிக்கல் வழிபாடு, சதிக்கல், சமாதி வைத்தல் முதலியவையும் இதனோடு தொடர்புடையவையாகும். இறந்துபட்ட முன்னோர்களை வழிபடும் வழக்கம் மிகத் தொன்மையானது. உலகம் முழுவதும் இவ்வழக்கம் நடைமுறையில் இருந்துள்ளது என்பதனைப் பலஆய்வாளர்கள் விளக்கியுள்ளனர். இறந்து பட்ட முன்னோர்களின் வழிபாடு பிற்காலத்தில் உருவ வழிபாட்டிற்கு அடிப்படையாக அமைந்தது .தமிழ் இலக்கணங்களில் கூறப்பட்டுள்ள நடுகல்மரபு மற்றும் நம்பிக்கைகள் குறித்த செய்திகளை இவ்வாய்வுக் கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

## நடுகல் தோற்றம்

"வழிபடு" என்பதிலிருந்து பிறந்தது வழிபாடு என்னும் சொல். வழிபடு என்பதற்கு வணங்குதல், வழியில் செல்லுதல், பின்பற்றுதல், நெறிப்படுத்துதல், பூசனை முறை என்று பல பொருள் உள்ளது. தெய்வங்களை மகிழ்ச்சிப் படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளும் பூசனை முறைகளுமே வழிபாடாகும்.

பழந்தமிழர் வழிபாட்டு முறைகளுள் வீரவணக்கமும் ஒன்று. நடுகல் வழிபாடு (Hero Stones) என்பது பெருங்கல்லறைகள் என்ற சடங்கு ரீதியானநினைவுச் சின்னங்களில் அடங்கும். சங்க கால நடுகல் என்பது வெகு புராதனமான நாகரீக வடிவமாகக் கருதலாம். வேட்டை,ஆநிரை கவர்தல், ஆநிரை மீட்டல் ஆகிய போர்களில் வீர மரணமடைந்த மறவர்களுக்குக் காடுகள், சிறுபாதைகள், ஓடைகளின் ஓரங்களில் (அருகில் நடுகற்களை நட்டு, அவற்றில் இறந்தவர்களின் பெயரும் பீடும் எழுதி வழிபட்டனர்.

## சங்க இலக்கியங்களில் நடுகல் காட்சியமைப்பு

முன்னோர்களைத் தெய்வமாக நினைத்து வழிபடுவது நடுகல் வழிபாடாகும். நடுகல் வழிபாடு நாளடைவில் சிறுதெய்வ வழிபாடாக மாறியது.சங்க இலக்கியப் பாடல்களான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் கி.மு.180 முதல் கி.பி. 290 வரையுள்ள கால கட்டத்தைச் சார்ந்தவையாகும். அவற்றுள் பலபாடல்களில் நடுகல் பற்றிய செய்திகள் விரவிக் காணப்படுகின்றன. சங்க காலத் தமிழக நடுகல் மரபுகள், வழிபாடு ஆகியவை பற்றிஅவ்வப்போது சில ஆய்வுரைகள் வெளியிடப் பட்டாலும் முழுமையான வரலாற்றைஅவை உறுதிப்படுத்தவில்லை என்றே தோன்றுகின்றது. சங்க இலக்கியங்களில் கல் நடுதல், வழிபடும் முறைகள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

### ஐங்குறுநூறு

ஓதலாந்தையார் எனும் புலவர் யானைத் தும்பிக்கையினைச் சொரசொரப்பான எழுத்துக்கள் பொறித்த நடுகல்லோடு ஒப்பிட்டுப் பாடியுள்ளனார்.

“விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்

எழுத்துடை நடுகல் அன்ன விழுப் பிணர்ப்

பெருங்கை யானை.” (Sadasiva Iyer, 1999)

### அகநானூறு

அகநானூறு அகம் சார்ந்த நூல் என்றாலும் பல அரிய வரலாற்றுச்செய்திகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.அம்மூவனார் பாலை நிலத்தின்இயல்பைப் பின்வருமாறு வர்ணிக்கிறார்.

"வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்

வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்

நடுகல் பீலி சூட்டி துடிப்படுத்து

தோப்பிக் கள்ளொடு துரூஉயிர்பலி கொடுக்கும்" (Balasubramaniyan, 2004)

என்று பாலை நிலத்தின் கொடுமையையும், அச்சத்தையும் குறிப்பிடுகின்றார். நடுகற்களுக்குக் கள்ளும், செம்மறி ஆட்டின் இறைச்சியும் படைக்கப்பட்டதை இப்பாடல் உணர்த்துகின்றது. நடுகற்களுக்குக்கள் வைத்துப் படைக்கின்ற வழக்கம் இருந்துள்ளது. நடுகல் குத்துக்கல் போன்று பெரியனவாக இருந்த செய்தியையும் அகநானூறு சுட்டுகின்றது.

தண்ணீர் இல்லாமல் வறண்டு போன நில வழியில் உள்ள உழிஞ்சில் (செந்நாய் பதுங்கியிருக்கும் குழி) பெண் செந்நாய் பசியுடன் படுத்து கிடக்கும். அதன்பசியைப் போக்க வேண்டுமென்று பிடுங்கித் தின்னும் வளைந்த பல்லுடன் ஆண் செந்நாய் திரிந்து கொண்டிருக்கும் அச்சம் தரும் காட்டுப்பகுதியின் வழியாகச் செல்பவர்களின் மீது அம்பு எய்திக் கொன்று அவர்களின் பொருளைக் கவர்ந்து கொண்டு, இறந்தவர்களின் பெயரைப் பொறித்துக் குத்துக்கல் போன்று உயரமான நடுகற்களை நட்டு வைத்தனர் என்பதை அகநானுற்றின் 53 ஆம் பாடலின் வழியாக அறிய முடிகின்றது.

பாலை நிலப்பகுதிகளில் போர் நடந்த இடங்களிலேயே வரிசை வரிசையாக பெயரும் பீடும் எழுதிய நடுகற்கள் காணப்பட்டதை,

"பெயரும் பீடும் எழுதி அகர்தொறும்

பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்

வேல்ஊன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்" (Balasubramaniyan, 2004)

என்ற பாடல் விளக்குகின்றது. நடுகற்களைச் சுற்றி வேல்கள் நடப்பட்டிருப்பதாகவும் அவற்றின் பெருமையை நினைத்து போற்றி வணங்குவதாகவும் நோய்ப்பாடியார் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் நடமாட்டமில்லாத மிகக் கொடுமையான பாலை நிலப்பகுதியில்நடுகல் நடப்பட்டது என்றும் திருடர்களிடம் பிடிப்பட்டுச் சண்டையிடுபவர்களின் அவயக்குரலைக் கேட்டு எவரும் காப்பாற்ற முடியாத, ஆள் நடமாட்டமில்லாத பகுதியில்நடுகற்கள் நடப்பட்டன என்பதை அகநானூற்று பாடல்களின் மூலம் அறியமுடிகின்றது.

## புறநானூறு

புறநானூறு எனும் தொகை நூலில் வீரர்களுக்கு மட்டுமல்லாது நாடாண்டமன்னர்களுக்கும் நடுகற்கள் நடப்பட்டன என்ற செய்தியை அறியமுடிகின்றது.

"நடுகல் பீலி சூட்டி நார்அரி

சிறு கலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லோ" (Avvai Duraisamy Pillai, 1968)

அதியமான் இறந்த பிறகு அவன் நினைவாக நடப்பட்ட கல்லுக்கு மயில் பீலிசாத்தி அழகு படுத்தி, சிறிய கலத்தில் கள்ளை ஊற்றிப் படையல் செய்கின்றனர்.அவன் வாழும் காலத்தில் நாட்டு மக்களுக்குக் கொடை வள்ளலாக விளங்கியவன்இறந்த பிறகு பலிப் பொருளை ஏற்றுக் கொள்வானா? என்று கூறுவதன் மூலம்நடுகல்லுக்கு மயிற் தோகை சாட்டுதலும், பலிப் பொருள் படைத்தலும் தமிழர் மரபுஎன்பதை இப்பாடல் உணர்த்துகின்றது. செல்லும் வழியில் உள்ள நடுகல்லை வணங்கிவிட்டுச் சென்றால் நன்மைபயக்கும் என்பதை,

"கல்லா இளையர் நீங்க நீங்கான்

வில் உமிழ் கடுங்கணை மூழ்க,

கொல்புனல் சிறையின் விலங்கியோன் கல்லே" (Avvai Duraisamy Pillai, 1968)

என்னும் பாடலடிகள் விளக்குகிறது.

## இலக்கணங்களில் நடுகல் மரபு

சங்க இலக்கியங்களில் காணப்படுவது போல சில இலக்கண நூல்களிலும்நடுகல் செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நடுகல் தேர்வு, நடும் இடம்,வழிபடுவது, கோட்டம் அமைப்பது முதலிய பல்வேறு நிகழ்வுகள் இலக்கணநூல்களில் காணப்படுகின்றன.

### தொல்காப்பியம்

தொல்காப்பியம்கி.பி.3 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இந்நூல் இலக்கண நூல்களிலேயே மிகவும் பழமையானதாகும். தமிழில் கிடைத்த முதல்நூலான தொல்காப்பியத்தில் நடுகல் பற்றிய செய்திகள் காணப்படுகிறது. தொல்காப்பியர் கல்நடுவது வெட்சியாருக்கும், கரந்தையாருக்கும் உரியது என்னும் பொருள்படும்படி வெட்சித்திணையில் வைத்துள்ளார்.

"காட்சி கல்கோள் நீர்ப்படை நடுதல்

சீர்த்தகு மரபில் கல்லொடு புணரச்

சொல்லப்பட்ட எழுமூன்று துறைத்தே" (Thamizhannal, 2010)

இந்நூற்பாவை விளக்குவதற்கு இளம்பூரணார் புறப்பொருள் வெண்பா மாலையைப் பயன்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. தொல்காப்பிய உரையாசிரியர்களான இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் பல்வேறு உதாரணங்கள் அளித்து நடுகற்கள் பற்றிய செய்திகளை விளக்கியுள்ளனர். தொல்காப்பியப் புறத்திணையியலில் இருபத்தியொரு துறைகளில் ஆறுதுறைகள் நடுகல் பற்றியவையாகும்.

தொல்காப்பிய நூற்பாவை விளக்குவதில் நச்சினார்க்கினியர் இளம்பூரணரின் உரையிலிருந்து வேறுபடுகிறார். காட்சி முதல் வாழ்த்து வரையுள்ள ஆறு துறைகளையும் உள்ளடக்கியது நடுகல் மரபாகும் என்பதை இரு மூன்று வகையில் கல்' என்ற தொல்காப்பியச் சொல்லாட்சி விளக்கிக்காட்டுகிறது. இதற்கு ஆறு வகை என்று பொருள் கொண்டார் இளம்பூரணர். ஆனால் நச்சினார்க்கினியர் காட்சி முதல் வாழ்த்து வரையுள்ள துறைகளை, முற்கூறப்பட்ட ஆறு, பிற்கூறப்பட்ட ஆறு, மொத்தம் பன்னிரண்டாக வகுத்துக் கொண்டார். "புணர" என்ற சொல்லாட்சியை வைத்து நடுகல் பற்றிய துறைகளைப் பன்னிரண்டாகப் பகுத்துள்ளார்.

ஆடவர்க்குரிய ஒன்றாகவே தொல்காப்பியர் பெயரும் பீடும் எழுதி வழியில் நட்ட வீரக்கல்லினைச் சுட்டக் காண்கிறோம். சங்க இலக்கியத்திலும் நடுகல் ஆண்களுக்குரிய ஒன்றாக் காட்டப்பட்டிருப்பதைக் கொண்டு பழந்தமிழர் நடுகல் நாட்டுவதனை ஆண்களுக்குரிய ஒன்றாக் கருதியமைத் தெளிவாகின்றது (Gandhi, 1981).

### காட்சி

போர்களத்தில் இறந்துப்பட்ட வீரருக்கு கல்நிறுத்தற் பொருட்டுக் காண்பது ஆகும். கல் நிறைந்த சுரத்திற்குச் சென்று கற்களை காண்பதும், அவற்றைக் கொணர்ந்து செய்ய வேண்டிய வழக்கங்களைச் செய்துநாட்டிப் பின்னர்க் கற்கண்டாலும் என இருவகைப்படும்.

"வீளைக் கடுங்கணையால் வேறாகி விண்படர்ந்த

காளைக்குக் கண்டமைத்தார் கல்" (புறப். பொது.8)

இதனை நச்சினார்க்கினியர் "கல் ஆராய்கின்ற காட்சி" என்று குறிப்பிடுகிறார்.

"கல்லாயு மேறெதிர்ந்து காண்டற் கெளிவந்த

வல்லாண் விடலைக்கு வம்மினோ - வெல் புகழாற்"

கடவுளாகிய பின் கல் கண்டது குறித்துப் பாடல் பாடப்படுவதால் சாதாரணக் கல்வழிபடுவதற்கான பொருளாக மாறியதனைவெளிப்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

## கல்கோள்

கல்கோள் என்பது தேர்ந்தெடுத்த கல்லைக் கொண்டு வருதல் ஆகும். கைக்கோடல் என்றும் கூறுவர். கல்லறுத்து இயற்றுதற்குக் கல்கோடலும் நாட்டிய பின்னர் வருவதற்குக் கல்கோடலும் என இருவகைப்படும்.

ஒருவரைத் தெய்வமாக நிறுத்துவதற்கு இடம் கொள்ளப்பட்டமையானும்அவ்விடத்துக் கல்கோடலாலும் கல்கோள் என்றாயிற்று.இதனை நட்டுக் கால் கொண்டது என்று நச்சர் குறிப்பிடுகிறார்.

## நீர்ப்படை

கால்கொண்ட கல்லினை நீர்ப்படுத்தித் தூய்மை செய்தலும் பின்னர்ப்பெயரும், பீடும் எழுதி, நாட்டி வழி நீராட்டுதலும் என இருவகைப்படும்.

"காடு கனற்றக் கதிரோன் சினஞ்சொரியக்

கூடிய வெம்மை குளிர்கொள்ளப் பாடி

நயந்தக மண்ணி நறுவிரை கொண் டாட்டிக்

கயத்தகத்து உய்த்திட்டார் கல்" (புறப்.பொது.10)

கோயில்களில் சிறப்பு அபிஷேகம் செய்யும் போது கடவுளை நீரால் தூய்மைசெய்வது போல நடுகல்லை இருமுறை நீர்க்கொண்டு தூய்மை செய்வது வழக்கம்.

## நடுதல்

கல்லினை நடுதலும் அக்கல்லின்கண் மறவனை நடுதலும் எனஇருவகைப்படும்.

"மாலை துயல் மணியெறிந்து மட்டுகுத்துப்

பீலி அணிந்து பெயர் பொறிந்து - மேலமருள்

ஆண்டக நின்ற அமர்வெய்யோற்கு இதென்று

காண்டக நாட்டினார் கல்" (புறப்.பொது.12)

பெரிய வேற்போரிடத்துத் தன்னுடைய ஆண்மைத் தன்மை மிகும்படி போர் செய்ய விரும்பினான் மறவன் ஒருவன். அவன் அப்போரில் வீரமரணம் அடைந்தான். அவனுக்கு இது உருவம் ஆகுக என்று ஒரு கல்லைக் கொண்டு வந்தனர். அதற்கு அசையும்படியாக மாலையை அணிவித்தனர். மணியை ஒலிக்கச் செய்தனர், கள்ளினைத் தெளித்தனர், மயிற்தோகையைச் சூட்டினர், அம்மறவனின் பெயரையும் புகழையும் கல்லில் எழுதினர், பலரும் காணும்படியாக நட்டு வைத்தனர் என்று புறப்பொருள் வெண்பாமாலையின் உதாரணச் செய்யுளை இளம்பூரணர் தொல்காப்பிய நூற்பாவிற்கு உதாரணமாக் குறிப்பிடுகிறார்.

## பெரும்படை

நாட்டிய கல்லிற்குக் கோட்டஞ் செய்தல் ஆகும். மறவனின் புகழைத் தரும்படிப் பொறித்தலும், அக்கல்லைத் தெய்வமாக்கிஅதற்குப் பெருஞ்சிறப்புகளைப் படைத்தலும் என இருவகைப்படும். நடுகல்லிற்குத் தீபங்கள் ஏற்றிச் சிறப்புச் செய்வதாகவும் நச்சினார்க்கினியர் கூறுகிறார்.

## வாழ்த்து

இதனை பழிச்சுதல் என்றும் இளம்பூரணர் கூறுகிறார். கல்கொள்ளுங்கால் தெய்வத்திற்குச் சிறப்புச் செய்து வாழ்த்தலும் பின்னர்நடப்பட்ட கல்லினைத் தெய்வமாக்கி வாழ்த்தலும் என இருவகையாகும். நடுகல் தொடர்பானஆறு துறைகளையும் பன்னிரண்டாக்கி நச்சர் கூறுவது பொருந்துமாறில்லை.மாறாகப் புறப்பொருள் வெண்பா மாலையைப் பின்பற்றி இளம்பூரனார் கூறும் ஆறுதுறை விளக்கங்கள் பொருத்தமானதாகவும், சிறப்பு வாய்ந்தாகவும் கருத முடிகிறது. எனினும், நடுகல்தொடர்பான செய்திகளை இளம்பூரணாரை விட நச்சினார்க்கினியர் நுணுகி ஆராய்ந்துள்ளார். நடுகல் பற்றி விளக்குவதற்குச் சங்கப் பாடல்களைத் துணையாகக் கொள்வதும்நடைமுறை வழக்காறுகளை உற்று நோக்கி அறிந்திருந்ததுமே அதற்கான முக்கியக்காரணங்களாக அமைகிறது.

## புறப்பொருள் வெண்பாமாலை

புறப்பொருள் வெண்பாமாலை கி.பி. 9ஆம் நூற்றாண்டில் தோன்றியது ஆகும். தொல்காப்பியத்திற்குப் பிறகு தோன்றியமையால் பல இடங்களில் தொல்காப்பியர் கூறும் புறப்பொருள் செய்திகளுடன் ஒத்து காணப்படுகிறது. தொல்காப்பிய உரையாசிரியர்கள் இருவரும் நடுகற் பகுதியைப் பொதுவியலாகக் கொள்வது போல ஐயனாரிதனாரும் புறப்பொருள் வெண்பாமாலையில் நடுகல் பகுதியைப் பொதுவியல் படலத்தில் கூறுவது நோக்கத்தக்கது.

கற்காண்டல், கல்கோள்நிலை, கல்நீர்ப்படுதல், கன்னடுதல், கன்முறைப்பழிச்சல், இற்கொண்டு புகுதல் எனத் தொல்காப்பியத் துறைவைப்பு முறையின் படித்துறைகளை அமைத்துள்ளார். ஆனால் இறுதி இரு துறைகளில் மட்டும் மாற்றம் காணப்படுகிறது. பெரும்படை, வாழ்த்தல் என்று தொல்காப்பியம் கூற ஐயனாரிதனார் வாழ்த்து பற்றி வரும் கன்முறைப் பழிச்சலை முன் வைத்துபெரும்படைப் பற்றி வரும் இற்கொண்டு புகுதல் என்பதைப் பின் வைத்துள்ளார்.

தொல்காப்பியத்தில் காணப்படும் நடுகல் பற்றிய நூற்பாவிற்குச் சங்கஇலக்கியப் பாடல்களை உதாரணமாகக் காட்டாமல் புறப்பொருள் வெண்பாமாலையில் வரும் வெண்பாக்களை இளம்பூரணார் உதாரணமாகக் காட்டியதன்மூலம் கி.பி.11ஆம் நூற்றாண்டில் புறப்பொருள் வெண்பாமாலை பெற்றிருந்தசெல்வாக்கை அறியமுடிகிறது.

- கற்காண்டல்

நறுமணப் புகை கமழ மலர்களைத் தூவி மறவர்கள் சாமியாடிக் கொண்டுகாட்டிற்குச் சென்று அம்பு பட்டு விழ்ந்த, விண்ணுலகை அடைந்த வீரனின் உருவம் செதுக்குவதற்குரிய கல்லெனக் காண்பது “கற்காண்டல்” ஆகும்.

“காளைக்குக் கண்டமைத்தார் கல்” (புற.பொது. நூ.7)

- கல் கோள்நிலை

நீரோடு பூக்களைச் சிந்தி நறுமணப் புகை கமழ மணியொலிப்பப் பறைக் கொட்ட வீரர்கள் நடுவதற்குரிய கல்லைக் கைக்கொள்வது “கல் கோள்நிலை”என்பதை,

"பூவொடு நீர்துவிப் பொங்க விரைபுகைத்து

நாவுடை நன்மணி நன்கியம்ப - மேவார்

அழல்மறங் காற்றி அவிந்தாற்கென் றேத்திக்

கழனல்மறவர் கைக்கொண்டார் கல்” (புற.பொது.நூ.8)

என்னும் செய்யுளடிகள் விளக்குகின்றன.

- கல்நீர்ப் படுதல்

நடுகல்லை வாவியிடத்தே(நீர்நிலை)அமிழ்த்திப் பின்னர் நறுமணப் பொருள்களைக் கொண்டு நீராட்டி, மலர் மாலைசூட்டி, நாட்டில் வெப்பம் குளிரட்டும் என மறவரை வாழ்த்துவதை,

“காடு கனலக் கனலோன் சினஞ்சொரியக்

கூடிய வெம்மை குளிர்கொள்ளப் - பாடி

நயத்தக மண்ணி நறுவிரைகொண் டாட்டிக்

கயத்தகத்து உய்த்திட்டார் கல்” (புற. பொது.நூ -9)

பேய்கள் வந்துபிணங்களை உண்ணுகின்ற போர்க்களத்தில் பகைவரது மார்புக் கொழுப்பை வேல் முனையிலே கொண்டு வெற்றி பெற்று பின்னர் மடிந்த மறவர்களது பேரும்பீடும் எழுதிய கற்களைச் சுற்றங்கள் சூழ்ந்து நிற்கும் நடுகல் நடும் இடத்தில்நடுவிக்கும் தலைவர்கள் முன் வரிசையாகக் கொண்டு வந்து வைக்கும் செய்திபற்றிக் கூறுவது “நீர்ப்படை” ஆகும்.

“கண்னார்ந் துவப்பக் கடுங்கண் மறவர்

விழுக்கினால் வேய்ந்த விறல்வேலோர் கல்லை

ஒழுக்கினா ரொன்றொருவர் முன்” (புற.பொது. 9)

- கன்னடுதல்

வீரனுக்குரிய கல்லுக்கு மலர்மாலை அணிவித்து, மயிற்பீலி சாட்டி, மணியொலிப்பக் கள்தெளித்து, அக்கல்லில் வீரனது பீடும் பெயரும் பொறித்து அழகான நடுகல் நாட்டலைக் “கன்னடுதல்” (கல் நடுதல்) என்பர்.

“அவன் பெயர்கல் மிசைப் பொறித்துக்

கவின்பெறக் கல்நாட்டின்று

மாலை துயல மணியெறிந்து மட்உத்துப்

பீலியணிந்து பெயர் பொறித்து - வேல்

நின்ற அமர் வெய்யோ கென்று

காண்டக நாட்டினர் கல்” (புறப்.பொ.நூ - 10)

- கன்முறை பழிச்சல்

அணிகலன்களும், வீரக்கழலும் அணிந்த வீரன் இறந்தபோது எடுத்தகல்லைப், பாணனை விளித்துக் கூறும் முறையில் வாழ்த்துவது, அதாவதுவள்ளலாய் வாரி வழங்கிய தலைவன் இப்போது எல்லாத் திசையில்உள்ளோர்களும் வணங்கப் பீடும் பெயரும் எழுதப்பட்ட நடுகல் வடிவிலேதெய்வமாய் நிற்கின்றான். அவன் சிறப்பை நினைத்து அழுது ஆற்றாது இருக்கும்நின் சுற்றத்தோடு சேர்ந்து பகைவர்களைக் கொல்லும் புகழை உன் பாடல் மூலம்வாழ்த்துசொல்வாயாக! என நடுகல் சிறப்பைப் போற்றுவது “கன்முறை பழிச்சல்”ஆகும்.

“கழல்வெய்யோன் கல் வாழ்த்தின்று”

அடும்புகழ் பாடி யழுதழுது நோனா

தெய்வமாய் நின்றான் திசைக்கு" (புறப்.பொது.நூ - 11)

- இற்கொண்டு புகுதல்

வேந்தரிடையே நடந்த போரில் இறந்த மறவருக்கு எடுத்த கல்லை வாழ்த்திஅக்கல்லிற்கெனக் கட்டப்பட்ட கோயிலின் உள்ளே வைத்தல். மறவரெல்லாம் ஒன்றுகூடிக் கொற்ற வாளுக்குப் பலிகொடுத்து மணியொலி எழுப்பிக் கல்லைக்கோயிலின் உள்ளே நடுவதற்குக் கொண்டு செய்வது "இற்கொண்டு புகுதல்" ஆகும்.

"வேந்தமருள் விளிந்தோன் கல்லென்

வேத்தினர் துவன்றி யிற்கொண்டு புக்கன்று

வாள்புகா ஊட்டி வடிமணி நின்று இயம்பக்

கோட்புலி அன்ன குரிசில்கல் - ஆள் கடிந்து

வில்கொண்ட வென்றி விறல் மறவர் எல்லோரும்

இல்கொண்டு புக்கார் இயைந்து" (புறப்.பெ.நூ - 12)

இவ்வாறு ஐயனாரிதனார் புறப்பொருள் வெண்பா மாலையில் நடுகல் பற்றிவிரிவான விளக்கங்களைத் தந்துள்ளார். இளம்பூரணரை விட நச்சினார்க்கினியர்நடுகல் பற்றி நுட்பமான பல செய்திகளைக் கூறினார் என்றாலும், நச்சரை விட மிகநுட்பமான பல எதார்த்த நடைமுறைகளுடன் தொடர்புப் படுத்தித் தானேவெண்பாக்களை இயற்றி நூற்பாக்களுக்கு விளக்கமளித்துள்ளார் ஐயனாரிதனார்.இவர் நடுகல் பற்றிப் புதிய செய்திகளையும் முரண்பட்ட வழக்காறுகளையும் பதிவுசெய்துள்ளார்.

இறந்த பல மறவர்களுக்கு ஓரிடத்தில் ஒருமித்துக் கல் நடுவதையும் நடுகல்நடுவற்கென்றே குடித்தலைவர்கள் இருந்தனர் என்பதையும் பதிவுசெய்துள்ளார்.

நடுகல்லை ஆற்றில் நீராட்டும் மரபு இருந்ததைச் சங்க இலக்கியத்திலும்,கண்ணகிக்குக் கல் எடுத்துக் கங்கையில் நீராட்டியதைச் சிலம்பிலும் அறியலாம்.

நடுகல் என்பது நினைவுச் சின்னம் மட்டுமல்ல. அது அடுத்த தலைமுறைக்கு வீரத்தினை ஊட்டும் தூண்டுகோலாகவும் உந்து சக்தியாகவும் அமைகிறது என்பதைமூதின்முல்லை, ஏறாண்முல்லை ஆகிய இரு துறை வெண்பாக்களில் மிகவும்நுட்பமாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

- மூதின்முல்லை

"வந்த படைநோனாள் வாயில் முலைபறித்து

வெந்திறல் எஃகம் இறைக்கொளீஇ - முந்தை

முதல்வர்கல் தான்காட்டி மூதில் மடவாள்

புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு" (புறப்.வா. 20)

என்னும் பாடல் தன் பாலகனுக்குத் தாய் பாலூட்டிக் கொண்டிருக்கிறாள்.அப்போது தன் நாட்டின் மீது பகைவர் ஒருவர் படையெடுத்து வருகிறார் என்பதைக்கண்ட மறவர்க்குடித் தாய், மகனின் வாயினின்று பால்குடித்துக் கொண்டிருக்கும்முலையை வெளியே எடுத்தாள். ஏற்கனவே பகைவரைக் குத்திக் குத்தி வளைந்தமுனைக் கண் இருந்த வேலை நிமிர்த்திக் கூராக்கிப் பால் மறவாப் பாலகனின்கையில் கொடுத்துத் தம் முன்னோர் நடுகற்களைக் காட்டி அவர்களின் வீரத்தைமகனுக்கு அறிவுறுத்திப் போருக்குச் செல்! என அனுப்பி வைக்கிறாள் என்றசெய்தியைப் பதிவுச் செய்துள்ளார்.

- ஏறாண்முல்லை

படையெடுத்து வந்த பகையரசனைக் கடைசி வரை எதிர்த்துப் போராடிய தன்குடும்பத்தினரின் வீரப் புகழைப் பேசுகிறாள் மறக்குடிப் பெண் ஒருத்தி.

"கன்னின்றான் எந்தை கணவன் களப்பட்டான்

முன்னின்று மொய்யவிந்தார் என்னையர் - பின்னின்று

கைபோய்க் கணையுதைப்பக் கவலன் மேலோடி

எய்போற் கிடந்தான் என் ஏறு" (புறப்.வா.21)

பலநாட்கள் தொடர்ந்து போர் நடைபெறுகின்றது (Puliyur kesigan 2009). தொடக்க நாளில் நடந்தபோரில் மடிந்த தந்தை நடுகல்லாகிவிட்டார். நேற்றைய முதல் நாள் போரில்கணவன் போர்க்களத்தில் உயிர்விட்டார். நேற்றைய போரில் தமையனார்விழ்ந்துபட்டனர். இன்று பகையரசனை எதிர்த்துப் போராடி உடம்பெல்லாம் தைத்தஅம்புகளுடன் முள்ளம்பன்றி போல் போர்க்களத்தில் மடிந்துகிடக்கின்றான் என்மகன்என தாய் குடிப்பெருமையைக் கூறுவதாக அச்செய்யுளைப் படைத்துள்ளார் ஐயனாரிதனார்.

## வீரசோழியம்

வீரசோழியம்கி.பி 11ஆம் நூற்றாண்டில் எழுந்த நூல் ஆகும். நடுகல் பற்றிய செய்தி ஒரு நூற்பாவில் மட்டும் இடம் பெற்றுள்ளது.

"சூடாப் பொலிகுதல் ஆரமரோட்டல் துகளறுகல்

தேடாப் பொறித்தல் கரந்தை" (வி.சோழி.பொரு.நூ - 15)

இந்நூலுக்குப் பெருந்தேவனார் உரை வகுத்துள்ளார். இவர் "துகளறுகல்தேடாப் பொறித்தல்" என்ற தொடருக்குப் போரில் மடிந்த வீரனது பெயர் பொறித்தகல் தேடுதல். அவ்வாறு பெயர் பொறித்த கல்லை நீராட்டுதல், நீராட்டிய கல்லைநடுதல் என உரைவிளக்கம் கொடுத்துள்ளார். இந்நூல் தொல்காப்பியம், புறப்பொருள்வெண்பா மாலை ஆகியவற்றிற்குப் பின் தோன்றியிருந்தாலும் நடுகல் பற்றியசெய்திகளை அந்த அளவிற்கு விரிவாகப் பேசவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இலக்கண விளக்கம்

இலக்கண விளக்கம்கி.பி.17ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வைத்தியநாத தேசிகர் இயற்றியது ஆகும். இந்நூலில் நடுகல் பற்றி ஒரு நூற்பா காணப்படுகின்றது. அவரே இந்நூலுக்கு உரையும் எழுதியுள்ளார். அதில் தொல்காப்பியத்தைப் பின்பற்றி நடுகல்செய்திகளைத் தொகுத்துள்ளார்.

நடுகல் பற்றித் தொல்காப்பியம் கூறும் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல்,பெரும்படை, வாழ்த்தல் ஆகிய ஆறுதுறைகளும் "குட்டித் தொல்காப்பியம்"எனப்படும் இலக்கண விளக்கத்திலும் இடம்பெற்றுள்ளது சிறப்பிற்குரியது.

"களத்திடை விழ்ந்தோர்க்குக் கல்கண் டிடுதலும்

கற்கோள் நிலையும் கல்நீர்ப் படுத்தலும்

கல் நாட்டுதலும் கல்முறை பழிச்சலும்" (இல.வி.நூ - 619)

1. கல் கண்டிருத்தல் - கல் தேர்ந்தெடுத்தல்,
2. கற்கோள் நிலை -தேர்ந்தெடுத்த கல்லை எடுத்துவருஞ்சிறப்பு
3. கல்நீர்ப்படுத்தல் - தேர்ந்தெடுத்த கல்லைப் புண்ணிய நீரால் நீராட்டுதல்,
4. கல்நாட்டுதல் - கல்லில் விரனின் உருவத்தைச் செதுக்குதல் (பிரதிஷ்டை செய்தல்)
5. கல்முறை பழிச்சல்- கல்லிற்குச் சிறப்புச் செய்து அதனை வீரர்கள் முன்னிலையில்பாராட்டி வழிபடுவது,
6. இற்கொண்டு புகுதல் - நடுகல்லிற்குக் கோயில் அமைத்தல்"என்று விளக்கமளித்துள்ளார்.

## சாமிநாதம்

சாமிநாதம் என்ற இலக்கண நூலை கி.பி.19ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சாமிகவிராயர் என்பார் இயற்றினார். இவர் தொல்காப்பியம் குறிப்பிடும் துறைகளைப்பின்பற்றி விளக்கியுள்ளார்.

"உன்னநிலை இளமையின்வேந்து இயற்கை கழல்புனைதல்

ஊக்கத்துர ழகநிலைபட்ட வற்கேகற் காண்டல்

அன்னகற் நிலைக்கன்னீர் படுத்திடுதல் கற் காண்டல்

அணிகன் னாட்டுதலேகன் முறை பழிச்சல் கல்லைத்

தன்னகத்தில் கொருபுகுதல் கணவனையே இழந்தாள்" (சாமி.பொது.நூ - 147)

தொல்காப்பியம் கூறும் ஆறு துறைகளை இந்நூல் கூறுகிறது .கற்காண்டல் என்ற துறை இருமுறை இடம்பெற்றுள்ளது. இது நச்சர்குறிப்பிட்ட "கல்கெழு சுரத்திற் கற்காண்டலும், அது கொணர்ந்து செய்வன செய்துநாட்டிப் பின்னர்க் கற்காண்டலும் என இருவகைப்படும்" என்பதைப் பின்பற்றிஅமைந்திருக்கலாம் என்று கருதமுடிகின்றது. தொல்காப்பியத்தில் பெரும்படைக்குப்பின்னர் வாழ்த்தல் இடம்பெறுகிறது. ஆனால் சாமிநாதர் கல்முறை பழிச்சல்,கல்லைத் தன்னகத்தே கொண்டு புகுதலுக்கு முன்னர்க் கூறியுள்ளது சற்றுமுரண்பாடாக உள்ளது.

நடுகல் வழிபாடு என்பது "இது வெற்றியால் மேம்படுத்தித் துறக்கம் புக்கப்பெரும் வீரர் பெயரையும் அவர்கள் அங்காங்கு புரிந்த போர்ச் செயல்களையும் ஒருநெடுங்கல்லில் எழுதி அதை நாட்டி அதில் அவர்களின் உரு செய்து மாலை பீலிமுதலியன புணர்ந்து வழிபடுதல் தமிழ்நாட்டுப் பழைய வழக்கமானது என்றுஅபிதான சிந்தாமணி நடுகல் பற்றிய செய்திகளைப் பதிவு செய்துள்ளது.

## முடிவுரை

பழந்தமிழரின் வீரத்தின்வழிபாட்டு வெளிப்பாடாகவீரக்கல் தெய்வங்கள் தோன்றின.நடுகற்கள் மிகக் கொடுமையான பாலை நிலத்தின் பாதை ஓரங்களில்நடப்பட்டனஎன்பதையும்நடுகற்களின் நிழலில் செந்நாய்கள் வெயிலுக்கு இளைப்பாறினஎன்பதிலிருந்துநெடியனவாக அமைந்திருந்தன என்பதையும் சங்க இலக்கியங்களின் மூலம்அறியலாம்.சங்ககால நடுகற்களில் கழுகும் பேய்களும் வாழ்ந்தன என்பதிலிருந்துமரங்கள்அடர்ந்தவனப்பகுதியில் நடுகற்கள் நடப்பட்டன என்பதை அறியமுடிகின்றது.பீடும் பெயரும் பொருந்திய நடுகற்கள் எனச் சங்க இலக்கியங்கள்குறிப்பிடுவதுபோலஇலக்கணங்களும் குறிப்பிடுகின்றன.தொல்காப்பியம், புறப்பொருள்வெண்பா மாலை, வீரசோழியம், இலக்கண விளக்கம், சாமிநாதம் முதலியஇலக்கண நூல்கள் நடுகல் மரபு பற்றி எடுத்துரைக்கின்றன.இலக்கியங்கள் மட்டுமல்லாது இலக்கண நூல்களும் நடுகல்நடும் முறை பற்றியும்,வழிபடும் முறை பற்றியும் விளக்கியுள்ளன என்பதை இவ்வாய்வு வெளிப்படுத்தியுள்ளது. சில வேறுபாடுகள் காணப்படினும், தொல்காப்பிய நடுகல் மரபும், வழிபடுமுறையும் மற்ற இலக்கண நூல்களுடன் பெரிதும் ஒத்து காணப்படுகின்றது என்பது இவ்வாய்வின் முடிபாகும்.

## References


Avvai Duraisamy Pillai, S. (1968) Purananuru, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India

Balasubramaniyan, K.V. (2004) Aganandooru, New Century Book House, Chennai, India.

Gandhi, K. (1981) Thamizhar Pazhakka Vazhakkangalum Nambikkaigalum, International Institute of Tamil Studies, Chennai, India

Puliyur kesigan (2009) Purapporul Venbaa Maalai Moolamum Uraiyum, Saradha Publication, Chennai, India

Sadasiva Iyer, T. (1999) Ainkurunuru Source and text, International Institute of Tamil Studies, Chennai, India.

Thamizhannal, (2010) Tholkappiyam, Manivasakar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License